பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889) ஆவணி மீ உ

# THE HINDU ORGAN.

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆண்டு 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மறுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கரு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞூ பங்குனிமீ அஉ (1924 மார்ஜ் 20) வியாழக்கிழமை { இலக்கம்—எஉ.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

### அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.
(H. 21)

### "சுதேசி".

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை. பத்திராதிபர். பி. கோதண்டராமன் எம். ஏ. பி எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம.

| | |
|---|---|
| வருட சந்தா | ரூபா 7. |
| 6 மாதச் சந்தா | ரூ. 3 அணு 12 |
| 3 மாதச் சந்தா | ரூ 2 |
| 1 மாத சந்தா | அணு 11 |

14, வாணியர் தெருவு,
சென்னை.

### "லோகோபகாரி".

30-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஜனங்களெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமான். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராகவும் அதிபராகவும் இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா 6. மாதிரிப்பிரதி இனும்

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

### "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரபத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தனனகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதினும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஒன்று.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணக் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்பு களின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆர்டர் செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு விலை ரூபா | 10—0—0 |
| 20 ,, | 40 ,, | ,, ,, ,, | 5—0—0 |
| 10 ,, | 20 ,, | ,, ,, ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம. பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA).

(H. 27)

### நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லைட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது சேலை 1க்கு ரூ. 45 முதல் ரூ 100 வரை.

கஸ்தூரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலமுடையது. விளிம்பில் $1\frac{1}{2}$, 2 இஞ்சு ஜரிகையினால் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்சு உயர்ந்த ஜரிகையினால் பூ வேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரூ. 80 முதல் ரூ. 150 வரை.

"கேட்லாக்" இனும். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

Silk Pitamber Coy.,
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27.)

### பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினல் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.

சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

### இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசுோதித்துப் பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, [illegible] மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.

(Q. 40)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
அறைக்கீரைவிரைத்தைலம்.




இதன் குணம்:

பித்த மேகக்ரானது சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறுது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். சோமஸுந்தம்மாள்,
மானியுபாக்கரார்,
8, பிராகஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரிஞு பங்குனிமீ 8உ வியாழக்கிழமை.

## கருமமே கண்ணாயிருத்தல்வேண்டும்.

நாங்கள் செய்யவேண்டிய ஒவ்வொரு கருமங்களையும் ஆரம்பித்தற்கு முன் நன்றாக யோசனை செய்தல்வேண்டும். அக்கருமத்தைச் சீராகச் செய்து முடிக்கக்கூடிய வழிகளைத் தாமே தேடிக்கொள்ளும் ஆற்றல் ஒருவருக்கு இல்லையேல், அக்கருமத்தில் அனுபவமுடையவர்களோடு நன்கு யோசனை செய்து தொடங்குதல்வேண்டும். எக்கருமமாயினும் தன்னுடைய மனச்சாட்சிக்கும், அக்கருமத்தில் அனுபவமுடையவர்களின் எண்ணத்திற்கும் ஒத்ததாயின், அதற்கு எவ்வித பேரிடர் வந்தபோதிலும் அதனை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது செய்து முடித்தலே வேண்டும். நன்றாக உழுது பண்படுத்தப்பட்ட வயலில் நெல் விதையை மாத்திரம் விதைத்தாலும், அது முளைகொண்டு வெளிவரும்பொழுது களைகள் முளைத்து நெற்பயிருக்கு இடர்செய்வதுபோல ஒருவித குற்றமுமில்லாத நன்மையான விஷயங்களிற் பிரவேசிக்குங் காலங்களில் அவற்றை இடர்ப்படுத்தும் பொருட்டு பலவித இடர் வந்து சேருவதே உலக இயற்கை. "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவமென்ப திழுக்கு" என்பது வள்ளுவநாயனார் வாக்காகும். ஆதலின் ஒரு கருமத்தை நன்றாக யோசனை செய்யாது ஆரம்பித்துப் பின் யோசனை செய்பவர் எப்பொழுதும் பேரிடருக் குள்ளாவரென்பது துணிபு. தீர்க்காலோசனை செய்து ஒரு கருமத்திற் பிரவேசிக்கும் ஒருவர் தன் கருமத்தைமாத்திரம் செய்து முடிப்பதிற் கண்ணுங் கருத்துமாயிருப்பதன்றி ஏனையோர் கூறும் வீண் வார்த்தைகளுக்கும், வசைமொழிகளுக்கும் செவிகொடுத்தல் கூடாது. நீராக் கோபம் வரக்கூடிய எவ்வித வார்த்தைகளையுங் [illegible] "பொறுமை கடலினும் பெரிது" எனவும், "பொறுத்தா ரரசாள்வர் பொங்கினார் காடேறுவர்" எனவும் ஆன்றோர் கூறுவர். தன்கருமத்திற் கண்ணாயிருக்கும் ஒருவர் பலவித கொள்கைகளையுடைய உலகத்துக்குச் செவி சாய்ப்பரேல், தகப்பனும் மகனும் தங்கள் கழுதையைக் கட்டிக் காவியதுபோல் முடியும்.

"மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார், எவ்வெவர் தீமையு மேற்கொளார்—செவ்வி, அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினார்".

நன்மையான விஷயங்களைச் செய்யுமிடத்து வரும் இடரைக் கண்டு ஒருபோதும் சோர்வடைதலும், பின்வாங்குதலும், அதனைக் கைவிடுதலுமாகா. சில விசேட தீர்த்தங்கள் அநேக பாவங்களை நீக்கும் பரிசுத்த முடையன. அத்தீர்த்தங்களி லாட விரும்பினோர் அங்கு ஒன்றின்பின் னொன்றாக மலைபோ லுயர்ந்து வரும் அலைகளைக் கண்டு தீர்த்தமாடா தொழியார். இது புண்ணிய தீர்த்தமல்லவா, இத்தீர்த்தத்தி லாடுவதற்கு மலைபோலும் அலைகள் ஓயாது எதிரே வந்து இடர்செய்யலாமாவென நினைந்து சோர்வடைவோரும், பின்வாங்குவோரும், அதனைக் கைவிடுவோரும் ஒருவருமிலர். எவ்வித கருமமாயினும் அது நன்மை பயக்குமொன்றாயின் அநேக கஷ்டங்களைத் தாண்டிச் சென்றாலன்றி ஒருபோதும் அநுகூலமாகாது. மந்த கதியுடன் ஊர்ந்து செல்லும் ஆமையானது தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாக இருந்தமையினால் வேட்டை நாய்களினாலுந் துரத்திப் பிடித்தற்கரிய முயலையும் வென்றுவிட்டது. உலகம் நன்மையான விஷயத்தில் மந்தகதியுடையதாகவும், தீமையான விஷயத்தில் வாயுகதியுடையதாகவு மிருக்கிறது.

ஆதலின் எவ்வித கருமத்திற் பிரவேசிக்கினும் ஊன்றி யோசனை செய்து தீர்மானித்த பின்னரே தொடங்குதல்வேண்டும். அவ்வாறு தொடங்கியபின் இது நன்மையுடையது, இது தீமையுடையது என்று பகுத்தறியும் ஆற்றலில்லாதவர்களுடைய பயனற்ற பிதற்றலைச் சிறிதேனும் பொருட்படுத்தாது திருவருளை முன்னிட்டு எடுத்த கருமத்தை முடித்தலிற் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

அன்று தொடக்கங் காசிநாதன் இடையறாச் சிந்தனையோடு காணப்பட்டான். தன் வீட்டின் ஒரு புறத்தேயுள்ள பூந்தோட்டத்திற் சென்று பலவாறு யோசித்தான். நேசமலரைக் காணுந்தோறும் ஆதவனைக்கண்ட செந்தாமரைமலர்போல் அலர்ந்த அவன் முகம், அந்நாள் தொடக்கம் சினத்துடன் காணப்பட்டது. தன் மனையாளை "நேசம்" என்று அழைப்பதையும் விடுத்தான். போசனம் பரிமாறும்போதும் மற்றும் வேளைகளிலும் நேசமலர் கூறும் உபசாரவார்த்தைகளெல்லாம் புறக்குடத்தி லூற்றிய நீர்போற் பயன்படாதொழிந்தன. தன் குழந்தை சுப்பிரமணியனைத்தானும் எடுத்து முத்தமிட்டு மதலை கேட்டு மகிழ்தலைக் காசிநாதன் மறந்துவிட்டான். இவற்றையெல்லாங் கண்ட நேசமலர், தன்னாயகனுள்ளத்தில் யாதோ மாறுபாடு நேர்ந்திருக்கவேண்டுமென யூகித் துணர்ந்து, மிக்க பரிவுடன் அவனை நோக்கி, பிராணேசா, அலர்ந்த செந்தாமரை மலரை யொத்து மலர்ந்து விளங்கிய தங்கள் முகம், சிலநாட்களாக வாடியிருத்தற்குக் காரணமென்னவோ, சொல்லியருளவேண்டு"மென்று மிக்க பரிவுடன் கேட்டாள். "அப்படி விசேஷமொன்றுமில்லை" என்று காசிநாதன் சொல்லிவிட்டு மெல்ல அவ்விடத்தைவிட் டகன்றான். கபடமற்றவளாகிய நேசமலர் தன்னாயகனுக்கு வியாபார விஷயமாக ஏதோ பொருள் நஷ்டம் நேர்ந்திருக்கக்கூடுமென்று எண்ணிக்கொண்டாள். தன் கணவன் மனக்கவலை கடிதில் அகன்றுவிடல்வேண்டுமென்று கடவுளை அநவரதமும் பிரார்த்தித்தாள்.

* *

இவை நிகழ்ந்து மூன்று நான்கு நாட்கள் கழிந்தபின் ஒருதினம் அதிகாலையில் நேசமலர் தன் வீட்டு வேலைகளைச் செய்து முடித்தபின், தன் நாயகன் நித்திரைவிட்டெழும் வழக்கமான நேரஞ் சென்றும் எழுந்து வெளியே வாராமை கண்டு, அவன் படுக்கையிற் சென்று பார்த்தாள்; ஆங்கு [illegible] வீட்டுக் கொல்லைப்புறத்தும் மற்றுமிடங்களிலுந் தேடினள்; காணவில்லை. தன் வேலைக்காரனை வெளியிற் சென்று இயன்றவரையில் இரகசியமாக விசாரித்து வரும்படி அனுப்பினாள்; அவன் தெருவீதியிற் சென்று, வழக்கமாக அதிகாலையில் நித்திரை விட்டு எழும் ஒரு முதியவரைக் கண்டு விஷயத்தைச் சொன்னபோது அவர் "உடையையும் நடையையும் பார்த்தபோது, காசிநாதனென்றே நினைத்தேன்; கையில் ஒரு "பாய்க்" (பிரயாணப் பை)யுங் கொண்டு போகக் கண்டேன்" என்றார். வேலைக்காரன் ஓடிவந்து, முதியவர் சொன்ன சமாசாரத்தைத் தன் எஜமாட்டியிடந் தெரிவித்தான். நேசமலரின் மனம் மத்தெறி தண்தயிர்போலக் கலக்கமடைந்தது. தன்னாயகன் தனக்குச் சொல்லாது சென்றாரென்பதை அவளால் நினைக்க முடியவில்லை. அவன் மனக்கவலைக்குப் பல காரணங்களைக் கற்பித்தாள். வியாபார விஷயமாக நேர்ந்த பண நஷ்டமே காரணமாகவிருக்கவேண்டுமென ஈற்றில் நிச்சயித்தாள். ஆனாலும் விரைவில் கடிதங் கிடைக்குமெனக் காத்திருந்தாள்.

*

"ஏன், போனதும் மீண்டதுமாக வந்துவிட்டீர்கள்; ஊரில் ஒருமாசம்வரையில் நிற்பதாகவல்லவோ சொல்லிச் சென்றீர்கள்; ஏதும் விசேஷமுண்டோ" என்று கண்டி நகரத்தில், தன் வீட்டிற்குச் சென்ற காசிநாதனை ஒரு கன்னிகாரத்தினம் குதூகலத்துடன் அழைத்துக்கொண்டுபோய் உபசரித்தாள். "கண்ணே, "நதிங் ஸ்பெஷல்" (விசேஷமொன்றுமில்லை) ஏன் நான் சீக்கிரம் மீண்டுவந்தது உனக்குப் பிரியமில்லையோ; அப்படியானால் நான் மீண்டும் ஊருக்குச் சென்றுவிடுகின்றேன்" என்றான் காசிநாதன். அதுகேட்ட அக்கன்னிகை தன் கையிலிருந்த "சுவிசேஷ" புத்தகத்தை மடியில் வைத்துவிட்டு, தானணிந்திருந்த மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்தபின், ஐயோ, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; ஊரிலே ஒருமாசம்வரையில் தங்கவேண்டுமென்று சொல்லிச் சென்ற நீங்கள் ஒரு வாரந்தானுஞ் செல்வதற்குமுந்தி வந்துவிட்டபடியாற் கேட்டேனேயல்லாமல், வேறு ஏதும் நினைத்தல்ல" என்றாள். "கண்மணி, நீ என் முன்னிலையில் இல்லாவிட்டால் என் சந்தோஷமெல்லாம் பறந்து விடுகின்றது. இப்பொழுது புன்னகையோடு கூடிய உன் வதனத்தைக் கண்டமாத்திரத்தே சூரியனைக் கண்ட பனிப் படலம்போல் என் கவலையெல்லாம் நீங்கின. காத்திராதபிரகாரம் நான் இங்கே வந்தமை உனக்குஞ் சந்தோஷந்தானே" என்றான் காசிநாதன். "எனக்குஞ் சந்தோஷந்தான்; ஆனால் நான் வாங்கிவரும்படி உங்களைக் கேட்ட பொருள் கொண்டுவந்தீர்களோ" என்று கன்னிகை வினவ, காசிநாதன் "அதை நான் மறந்துவிடவில்லை, யாழ்ப்பாணத்திலுள்ள இரத்தின வியாபாரிகளின் கடைகள் எல்லாவற்றிலும் பார்த்தேன், விலையுயர்ந்த முத்துக்கள் அங்கே இருக்கின்றனதான்; ஆனால் நீ காதில் அணிந்துகொள்வதற்குத் தக்க சோடியாகவில்லை" என்று காசிநாதன் சொன்னான். கன்னிகை முகம் மாறுபட்டு "ஆகா, சோடி கிடைக்காமையினாலேதான் வாங்காமல் வந்துவிட்டீர்களாக்கும். இப்படிச் சாட்டுச் சொல்வதென்று இங்கே வந்தபின்தான் நினைத்தீர்களோ, இல்லாவிட்டால் றயிலிலேயே நினைத்துக்கொண்டு வந்தீர்களோ, யாழ்ப்பாணம் முழுவதும் ஒருவாரமாகத் தேடி இரண்டு முத்துக்கள் சோடியாக அகப்படவில்லையாம், இதை யார் நம்புவார்கள், சொல்வார் சொன்னாலுங் கேட்பார்க்கு மதியென்ன, ஏன் மனசார மறந்துபோய் விட்டேனென்று உண்மையைச் சொல்லிவிடலாமே, எனக்கு உங்கள் முத்தும் வேண்டாம்" என்றாள். கன்னிகை யுரைத்த வார்த்தைகளொவ்வொன்றும் காசிநாதனுள்ளத்தை ஊடுருவின. அவன் பதைபதைத்து, "என் காதலியே, கவலைப்படாதே, இரண்டல்ல, உன் காதிலணிய ஆறு முத்தமும் உன் வதனவிநோதத்திற்கு நூறு முத்தமும் நான் சீக்கிரந் தருவேன் என்னை நம்பு" என்று அவளைத் தேற்றினான். (வரும்).

* *

"பத்திராதிபரண்ணே, வாருங்கள், வாருங்கள், கண்டு வெகுநாள், நான் ஊருக்கு வரும்போதே உங்களையும் ஒருமுறை கண்டுகொண்டுதான் போகவேண்டுமென்று வந்தேன். எப்படிச் சுகம்? நாங்கள் தூரதேசத்தி லிருந்தாலும் கிழமைக்கு இருமுறையாயினும் உங்களை நினைத்துச் சிரித்துக்கொள்ளுவது வழக்கம்" என்று சிங்கப்பூரில் வேலையாகவிருந்து விடுமுறையில் மீண்ட அபிமானம்பூண்ட ஒரு வாலிபன் கூறினான். "உங்களை நினைத்துச் சிரிப்பது வழக்கம் என்றீரே, எம்மைப் பரிகாசஞ் செய்யும்பொருட்டுச் சிரிக்கிறீர்களோ" என்று கேட்டார் பத்திராசிரியர். "ஐயோ, அப்படி ஒருபோதுமில்லை. ஆனந்தமேலீட்டினாலேதான் சிரிக்கிறோம்; ஐயா, உங்களுக்குத் தெரியாது, பிறவூரில் வசிக்கும் எங்களுக்கு இப்பத்திரிகை வருவது எங்கள் சுற்றமித்திரரைக் கண்டதுபோலிருக்கும்; பத்திரிகையிலுள்ள சில விஷயங்கள் கரும்புபோலத் தித்திக்கும்; இப்பொழுது எழுதிவருவதுபோல் முகமன் பாராமல் நீதியைக் கடைப்பிடித் தெழுதுங்கள்........" என்று சொல்லுதற்கிடையிற் பத்திரிகாசிரியர் பெருமூச்சுவிட்டு, "தம்பி, காலத்தின் கோலம் நோக்காமற் பேசுகின்றீர்; கரும்பிற்குத் தித்திப்பதே இயல்பாக விருந்தாலும் சிலருக்கு அது கசப்பதுமுண்டு......" எனலும் வாலிபன் "ஆருக்கு, காய்ச்சலுடையவருக்குத்தான் கரும்பு கசக்கும்" எனலும் "ஆம், இதுவும் ஏய்ப்பது காய்ச்சலுடையாருக்குத்தான் கசக்கும், மேலும், முகமன்பாராது பயப்படாது நீதியை எழுதும்படி சொன்னீர், தம்பி, எங்கள் கிராமத்தைக் காசுக்காக விற்றுவிட்டோமென் றெண்ணுவதோ டமையாது, சிலர் எங்கள் சுவதந்திரத்தையும் விற்றுவிட்டோமென எண்ணுகின்றார்கள்; கடலிலே பாத்திகோலி வாய்க்கால் வகுத்துத் தோட்டஞ்செய்ய முயல்வார்போலச் சிலர் எங்கள் அபிப்பிராயத்தையுங் கட்டுப்படுத்த முயலுகின்றார்கள். இதுகாறும் முகமன் பாராட்டாது அச்சமின்றி எம் அபிப்பிராயத்தைக் கூறிவந்துள்ளோம். இனியும் அங்ஙனஞ் செய்யின் உதரத்தில் அடிவிழுமோவென உள்ளம் பயப்படுகின்றது. ஆனாலும் உள்ளதை உள்ளபடி கூறி உலக நன்மையின்பொருட்டு உண்மையாக உழைக்கும் பத்திரிகையொன்று ஊரில் இருக்கவேண்டுமென்பதே எமது துணிபு. அதற்குப் பிரதிகூலமாக எது வரினும் வரட்டும். உண்மைக்கு அழிவில்லையென்பர்" என்றார் பத்திரிகாசிரியர்.

* *

"அண்ணே, நீங்கள் சொல்வது முழுவதுஞ் சரி; இது கிடக்க, இன்னுமொரு சங்கதி உங்களைக் கேட்கிறேன்; சட்டநிரூபணசபைக்குப் பிரதிநிதியாகத்தெரிவு செய்யப்படுதற்கு முற்பட்டு முயற்சிசெய்பவர்களைப்பற்றி மற்றைப்பத்திரிகைகளிலெல்லாம் இடையிடையே யெழுதப்பட்டுவர, நீங்கள்மாத்திரம் மௌனஞ் சாதித்து வருவதற்கு நியாயமென்ன" என்று வாலிபன் கேட்க, ஆசிரியர் நகைத்து, "தம்பி, 'சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது' என்னும் பழமொழியை நீர் கேட்டிலிரா; அந்த விஷயமாக ஏதும் எழுதி மனஸ்தாபத்தை ஈட்டிக்கொள்வதல்லாமல் வரும் நன்மை யாதுமில்லை; 'ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்றாற்போல, முருகேசனைப் பற்றி ஏதும் நன்மையாக எழுதினால், சரவணமுத்து எம்மீது கோபித்துக்கொள்வர்; சரவணமுத்துவைப்பற்றி நன்மை சொன்னால், நீக்கிலாப்பிள்ளை எம்மைக் குறைகூறுவர்; மூன்றுபேரையும் நன்மை சொன்னால் அம்மூவரும் தனித்தனி தம்மை நன்மைசொல்வதை விடுத்து மற்றையிருவரையும் நன்மை சொன்னதற்காக எம்மைச் சினப்பர்; என்ன செய்யலாம், இருதலைக் கொள்ளியெறும்புபோல், இங்குஞ் சங்கடம் அங்குஞ் சங்கடந்தான். இதற்காகவே இந்த விஷயத்தில் 'மௌனங் கலகநாஸ்தி' என்ற பிரகாரம் மௌனஞ் சாதித்து வருகின்றோம்" எனலும் வாலிபன் "அண்ணே, நீங்கள் ஒருவரைக் குறித்தெழுதாது பொதுவாக எழுதிவிடலாமே" என்று சொல்ல, 'ஐயோ! தம்பி, பொதுவாக எழுதினால், எம்மைப் பொதுவாக மூன்றுபேருங் குறைசொல்வர்" என்றார். வாலிபன் சிறிதுநேரம் யோசித்து "அண்ணே, உங்கள் உத்தியோகமுஞ் சங்கடமானதுதான்" எனலும், "தம்பி, சங்கடமோ, பரம சங்கடம்; ஏதோ பிழைக்கத் தெரியாமல் இதில் வந்து அகப்பட்டுகொண்டு விழிக்கவேண்டியிருக்கிறது" என்றார். வாலிபன் "சரி, நீங்கள் எழுதவேண்டாம்; யாராயினும் இந்த விஷயத்தைப்பற்றிக் கடிதமாக எழுதியனுப்பினால், போடுவதற்கு நீங்கள் யோசிக்க வேண்டிய தென்ன?" என்று கேட்க, ஆசிரியர் "தம்பி, அந்த வயிற்றெரிச்சலைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளும்; கடிதமெழுதுபவரொருவர் தெரிவிற்கு நிற்கும் ஒருவரைப்பற்றிப் புகழ்ந்தெழுதினால், இன்னொருகடிதர் இவரை இகழ்ந்து மற்றவரைப் புகழ்ந்தெழுத, முந்தியவர் மற்றவரை இகழ்ந்து இவரைப் புகழ்ந்தெழுத ஈற்றிலே பத்திரிகாசிரியர் பாடு ஒட்டகத்திற்கு இடங்கொடுத்தவர் போல முடியும்" என்றார்.

* *

"அண்ணே, அதுவுஞ் சரி; இன்னமொன்றுகேட்கிறேன் அதற்கென்ன சொல்லுவீர்கள். இன்ன இன்ன பிரிவிற்கு இன்னாரின்னார் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்படுதற்கு முற்பட்டிருக்கின்றனரென்பதை மற்றைப்பத்திரிகைகாரர்வெளியிட்டுவருகின்றனர். நீங்கள் அதையாவது வெளியிடக்கூடாதா! இந்தவிஷயத்திலே நீங்கள் மௌனஞ் சாதிப்பது தவறு" என்றான் வாலிபன். அதற்கு ஆசிரியர் "தம்பி, எடுத்தாற்போலே 'தவறு' என்று சொல்லி முடித்துவிடவொண்ணாது. வடமாகாணத்திலே இதற்காகிய பிரிவுகள் ஐந்து; தெரிவுசெய்தற்கு முற்பட்டு நிற்போர் ஐயைஞ்சுக்கு மேற்படுவர். ஆரம்பத்தில் முற்பட்டோர் சிலர் மாண்டனர்; சிலர் நோய்வாய்ப்பட்டனர்; சிலர் புதிதாக முற்படுகின்றார்கள்; அவரைக்கண்டு வேறு சிலர் தாம் முற்படுவதை விட்டுப் பிற்படுகின்றனர்; மற்றுஞ்சிலர் முற்படுகின்றனர்; இன்னுஞ் சிலர் முற்படுவர். இப்படியெல்லாமிருந்தால் நாம் ஆரை நம்பி பெழுதுவது; தெரிவு செய்யப்பட்ட பின் தான் நிச்சயஞ் சொல்லலாம். வேண்டுமானால் அதன்பின் எமது திறமையை இருந்து பாரும்" என்றார். "அண்ணே, எதைக் கேட்டாலும் நியாயஞ் சொல்லுகிறீர்கள்" என்றான் வாலிபன். "எதைக் கேட்டாலும் நியாயத்தைத்தானே சொல்லுகிறேன்" என்றார் பத்திராசிரியர். "சரி, தெரிவுசெய்யப்படுதற்கு முற்பட்டுநின்ற ஒருவருக்குமாறாகவும், இன்னொருவருக்குச் சார்பாகவும் எழுதிப் பல கைச்சாத்திட்ட கடிதமொன்று உங்கள் பத்திரிகையிற் காணப்பட்டதே, அது நீதியா" என்று வாலிபன்கேட்டலும், "அதுகடிதமென் றெழுதப்பட்டாலும் கடிதமல்ல, பணத்துக்கு விளம்பரமாகப் போடப்பட்டது" எனலும்; வாலிபன், "இன்னது விளம்பரம் இன்னது கடிதமென்பதை நாங்கள் எப்படியறிந்து கொள்வது" என்று கேட்க ஆசிரியர் "விளம்பரத்திற்கு இலக்கமிட்டிருப்போம், கடிதங்களுக்கும் மற்றும் விஷயத்திற்கும் இலக்கமிடுவதில்லை, உம்மைப்போல வேறு சிலரும் இதனை விபரீதமாக விளங்கிக்கொள்ளுகிறார்கள். விளம்பரமோ என்னுஞ் சந்தேகத்தை இப்படி நீக்கிக்கொள்ளலாம்" என்றார். வாலிபன் ஆசிரியரிடம் அநுமதிபெற்றுச் சென்றான்.

## சமாசாரம்

மூன்றும் வகுப்புப் பிரயாணச் துண்டுடன் இரண்டாம்வகுப்பிற் பிரயாணஞ்செய்தமை:- குவெரெலியில் K. T பெரேரா என்னும் ஒரு ஒப்பந்தக்காரன் சென்ற சனிக்கிழமை நனுஓயாவிலிருந்து கொழும்புக்கு வந்த புகைரதத்தில் மூன்றும் வகுப்புத் துண்டுடன் இரண்டாம் வகுப்பிற் பிரயாணஞ் செய்தாரெனக் கொழும்புப் பொலிஸ்கோட்டிற் குற்றம் சாட்டப்பட்டுப் பத்துரூபா அபராதம் விதிக்கப் பெற்றார்.

**புகைரதப் புது ஒழுங்கு**:-இலங்கையிலுள்ள புகைரதப்போக்குவரவுகளின் நேரத்தைக் குறித்த புதியவிளம்பரம் வெளிவந்துவிட்டது. இதன்படி இதுகாலும் விதிக்கப்பட்டிருக்கும் நேரம் பெரும் பான்மையும் மாறுபட்டிருக்கின்றது. வருகிற ஏப்பிரல்மீ 7உ தொடக்கம் இங்கிருந்து கொழும்பிற்குச் செல்லும் காலைப் புகைரதம் காங்கேசன்றுறையிலிருந்து 5 மணி 25 நிமிஷம் வரையிற் புறப்பட்டு யாழ்ப்பாணத்தையடைந்து அங்கிருந்து 6 மணி 5 நிமிஷம் வரையிற் புறப்படும். பின்னேரப் புகைரதம் காங்கேசன்றுறையிலிருந்து 4 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணத்தையடைந்து 4 மணி 40 நிமிஷம்வரையில் அங்கிருந்து கொழும்பிற்குப் புறப்படும். கொழும்பிலிருந்து வரும் புகைரதங்கள் காலை 6 மணி 57 நிமிஷம்வரையிலும், மாலை 8 மணி 46 நிமிஷம் வரையிலும் யாழ்ப்பாணத்தை முறையே சேரும். இரணைமடுவிலிருந்து பகல் 1 மணி 40 நிமிஷம் வரையில் ஒரு புகைரதத் தொடர் புறப்பட்டு நாலரைமணி வரையில் யாழ்ப்பாணத்தையும் 5 மணி 23 நிமிஷம் வரையில் காங்கேசன்றுறையையும் முறையே சேரும். காங்கேசன்றுறையிலிருந்து காலை 6 மணி 25 நிமிஷம் வரையில் ஒரு புகைரதத் தொடர் புறப்பட்டு யாழ்ப்பாணங்கண்டு அங்கிருந்து 9 மணி 4 நிமிஷம் வரையிற் புறப்பட்டு பகல் 1 மணி 20 நிமிஷம் வரையில் இரணைமடுவையடையும், இவற்றைவிட மூன்றுமாசங்களுக்குப் பரீட்சார்த்தமாக இரண்டு புகைரதத்தொடர் காங்கேசன்றுறையிலிருந்து கொடிகாமம் வரையிற் போக்குவரவு செய்யும்.

### ராம கங்கா ரயில் விபத்து.

பார்லி, மார்ச் 16.

ராமகங்கா நதி பாரிஸ்லி நகருக்கருகில் 50 கஜம் அகல முள்ளதாயிருக்கிறது. அதன் மேலிருக்கும் பாலத்தில் இரண்டு ரயில்பாதைகள் இருக்கின்றன. அயோத்திரோஹில் கண்டு ரயில்வே பாதை அகல அளவு பாதை. மீடர் அளவு பாதையாகிய ரோஹில் கண்டு கூமான் பாதையின் தண்டவாளங்கள் அகல அளவுப் பாதைக்கு இடையேபோடப்பட்டிருக்கின்றன. 15உ மாலை மீடர் அளவு பாதையில் வந்து கொண்டிருந்தபிரயாணி வண்டிமேற்படிபாலத்தின்மீது போய்க்கொண்டிருந்தபோது பின்னுலிருந்து புயற்காற்றினுல் தாக்கப்பட்டது. காற்று வண்டியின் பின்புறத்தை மூன்று அங்குல உயரம் மேலே கிளப்பி மூன்று அடிக்கு அப்பால் பாலத்தின் ஓரத்தில் வைத்ததாகத் தெரியவருகிறது. இதன் பலனாக மூன்றுவது வகுப்பு வண்டிகள் ஐந்து ஆற்றில் விழுந்து விட்டன. இரண்டுவண்டிகள் தண்ணீரிலும் மற்றவை படுகையிலும் தலைகுப்புற விழுந்தன. முப்பது அடி உயரத்திலிருந்து விழுந்த படியால் மூன்றுவண்டிகள் சுக்கல் சுக்கலாக உடைந்துபோய்விட்டன. பாக்கி இரண்டு வண்டிகள் பாலத்தின் ஓரத்தில் சாய்ந்து நின்று விட்டன. இந்த இரண்டு வண்டிகளிலிருந்துதான் காயப்பட்டவர் பலர் காப்பாற்றப்பட்டனர். தப்பிப் பிழைத்தவர் எங்ஙனம் தாங்கள் தப்பினார்களென்று பெரும் ஆச்சரியப் படுகிறார்கள். இதில் விசேஷமென்ன வெனில் முன்வண்டியிலிருந்தவர்களுக்குப் பின்வண்டிகள் விழுந்துவிட்ட செய்தியே தெரியாது. ஒரு பெரிய சத்தம் கேட்டதாகவும் இடியினுடையசத்தமென்று நினைத்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள். ரயில்வேயின் கார்டு கடைசி வரையில் தன்னுலான முயற்சி எல்லாம் செய்தார். அவருடைய வண்டி படுகையில் விழுந்தபடியால் அவருக்குப் பலத்த காயமேற்பட்டது. ஆயினும் அவர் அக்கரைக்கு நீந்திச் சென்று ரயில்வே ஸ்டேஷனில் விஷயத்தை அறிவித்தார். அதன்பின் அவர் பிரேமை படுத்தார். இப்பொழுது வைத்தியசாலையில் அபாயகரமான நிலைமையில் இருக்கிறார்.

உதவி டிராபிக் மானேஜர் மிஸ்டர் சோலாலன் என்பவரின் தலைமையில் 35 கூலியாட்களும் மற்றும்பல போலீஸ்காரர்களும் அதிசீக்கிரத்தில் ஸ்தலத்துக்கு வந்தனர். இது வரையில் 22 பிரேதங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. காயமடைந்தவர்கள் 55 பேர் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் இருவர் இன்றைய தினம் இறந்துவிட்டதாகத் தெரியவருகிறது. உயிர்ச்சேதம் இவ்வளவுதானென்று இன்னும் நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. தண்ணீரில் முழுகியிருக்கும் வண்டிகள் இன்று மாலைக்குள் வெளியே எடுக்கப்படு மாதலால் அப்பொழுது மொத்த உயிர்ச்சேதம் தெரிந்துவிடும்.

"நவசக்தி"

## சுபோதந் துணுக்கைகள்.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது)

### தற்போதம் நீங்கப்பெருதாரின் செய்கை தாணுவின் செயலாகுமா?

அளக்கருடுத்த அவனியிலுதித்த ஆன்மாக்கட்கு "நான்" என்னும் அகங்காரஞ்செறிந்த ஓர் அறிவு உண்டு. இது அநாதியாகவே ஆணவமலத் தடிப்பினுல் உண்டாயிருக்கும் அஞ்ஞான உணர்ச்சியாகும். இந்த அறிவையே "தற்போதம்" என்று சான்றோர் கூறுவர். இத் தற்போத முனைப்பானது ஞானசாரியாரது திருநோக்காலன்றி வேறெவ்வித தந்திரோபாயங்களாலும் ஒழியமாட்டாது. ஆகலால் தற்போதம் உள்ளவரை, ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினையனைத்தும், ஆன்மாக்களின் செயல்களேயாய்த் தத்தம் பயன்களாகிய சுகதுக்கங்களை அவைகட்கு உண்பியாமல் நீங்கமாட்டா. இச் சித்தாந்த உண்மையை அறியமாட்டாத ஆஷாடபூதிகள்சிலர் "எல்லாம் சிவன்செயல்" "நமக்கென யாதொரு செயலுமில்லை; எதையும் அவ்விறைவன் செய்விக்க நாம் செய்கின்றோம்" என்று வாயால்மாத்திரஞ் சொல்லிக்கொண்டு பஞ்சமாபாதகங்களை அஞ்சாது செய்கின்றார்கள். "எல்லாஞ் சிவன் செயல்" என்பதும், "எதையும் அவ்வீசன் செய்விக்க நாம் செய்கிறோம்" என்பதும் ஆப்த வாக்கியமே. அந்நிலை "நான் எனது" என்னும் அகங்கார மமகாரங்கள் நீங்கப்பெற்று, "ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும்" மகான்களுக்கேஒக்கும். அத்தகைய சீவன்முத்தர் 'எல்லாஞ் சிவன்செயல்' என்றுணர்ந்து திரிகரண சுத்தியோடு தீவினைகளைச்சொப்பனத்திலுங் கருதாதவர்களாய், எல்லாம் சிவமயமாகவும், எவ்வுயிரும் எம்பிரான் சந்நிதியாகவும், எண்ணற்ற உடலனைத்தும் ஈசன்கோவில்களாகவும் கண்டு, அன்பு, சிராசை, அருள், பொறை, ஞானம் முதலிய நற்குணங்களோடு விளங்குவர்; இன்ப துன்பம் எதுவரினும் கமலநீர்போல ஒன்றிலுந் தாக்குறாது அனைத்தும் ஈசன் அருளாகக் கண்டு அநுபவிப்பார்கள் அத்தகைய ஞானஉணர்ச்சி அணுத்துணையுமின்றி ஆசைக்கடலுழ் மூழ்கி அல்லும் பகலும் குளிப்பற்ற தீவினைகளை யீட்டி, இன்பம் வந்தபோது ஆனந்தசாகரத்தில் மூழ்கித் தலை கால் தெரியாது சந்தமாடியும், துன்பம் வந்தபோது அக்கவீட்டுக்கு வந்தவரோடுங் கட்டிக்கொண்டு அழுதும் "மலத்தை யுண்டு சேற்றிற் புரண்டு மகிழும் வராகத்தைப்போல" மின்னினை நிகர்த்த உலக வாழ்க்கையைச் சதமென்று கருதி, இருக்க நோயின்றி ஞமலியைப்போல உழன்று திரியும் நட்போலியர் "எல்லாஞ் சிவன் செயல்" என்று தீவினைகளைச் செய்தால், அச்செய்கைகள் எங்ஙனம் சிவன் செயலாகும்! இவர்கள் "எட்டினுற் குடுமி எட்டாவிட்டாற் கால்" என்றவனைப்போல, "சித்தி யெய்துங் காரியமனைத்துந் தங்கள் செயல்" என்றும் சித்தி எய்தாத செய்கைகளைச் சிவன்செயலென்றுஞ் சொல்லுகிறார்கள். அந்தோ இப் பரத்திருடர் கடவுளுக்கும் பட்டை நாமஞ் சாதுகின்றார்களே! அந்தரங்கத்தில் படிற்றொழுக்க முடையராய் ஆசைவாய்ப்பட்டுச் சந்ததமும் பவச்செயல் புரிந்து, பகிரங்கத்தில் வாய்ஞானம்பேசி நடிக்கும் பாவிகளாகிய இவர்கட்கு நிரயம் காணியாட்சியாகுமென்பது ஒருதலை அந்தகனிடத்தில் இவர்கள் தந்திரோபாயஞ் செல்லாது?

வேறு சிலர் உலகத்திலே தீவினை செய்தவர் லக்ஷாதிபதிகளாயிருந்து வாழ்கலையும், நல்வினை புரிந்தவர் சகித்தற்கரியமிடியினுல் இன்னலுழப்பதையுங் கண்டு, "நல்வினை தீவினைகளால் புண்ணிய பாவங்களும், அவைகாரணமாக மனிதருக்கு இன்பதுன்பங்கள் எய்துகின்றன. என்பது வெறும்பொய் யென்று சொல்லி" "நன்னலமாதரை நண்ணுமின்மேயுண்ணுருமுத்தி" என உன்னி எந்நாளும் அதிலேயே யீடுபட்டு உலோகாயுதத்தைத் தழுவி ஒழுகுகின்றார்கள்! இவர்கள்சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும் கன்மலங்களின் பாகுபாடுகளை யுணராமையினுலே இங்ஙனம் தீவினைகளையீட்டி ரௌரவாதி நரகங்கட்கு ஆளாகின்றார்கள்! ஆன்மாக்கள் ஒவ்வொருவரும் முன்சென்மத்தில் செய்த பாவ, புண்ணியங்களாகிய பிராரத்துவத்துக்குத் தக்கதாகவே இந்தச் சன்மத்தில் சுக துக்கங்களை அநுபவிக்கின்றார்கள். கருணாநிதியாகிய கடவுள் அவரவர்களைப் பந்தித்துள்ள கன்மவேறுபாடுகட்கிசைய வினைப்பயன்களை முறை பிறழாது ஊட்டுவர். எந்த எந்த ஆன்மாக்களை உய்யும் விதமாக வினைகளைப் புசிப்பித்து ஆட்கொள்ள வேண்டுமென்பது, யாருணரும் முற்றறிவுமுடைய பெருமானுக்கே தெரியும். ஆகலால் பாவிகள் அட்ட ஐசுவரியங்களோடு கூடி வாழ்தலைக்கண்டு நாம் சிந்தை சிலைதிரிதல் புத்தியன்று.

ஞாலத்தில் நல்வினைசெய்தல் அரியதும், தீவினை செய்தல் பிரளியதுமாம். ஆன்றோர் ஆயிரத்துக்கு மேற்பட்ட இன்னல்கள் ஒன்றின்மேலொன்றாய் அடுக்கி வரினும் அதனுல் எட்டுணையுஞ் சிந்தை அலமந்துவிடாது,! "தலைக்கு விஞ்சிய தண்டனையும்; கோவணத்திற்கு மேற்பட்ட தரித்திரமுமில்லை" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நல்வினைகளையே நாடோறுஞ் செய்து வருவர்; செயற்கெளிய பாவச்செயல்களைப் புரியப் பெரிதும் அஞ்சி நடுங்குவர்.

வேறுசிலர் புண்ணியங்களைச்செய்தால், அதனுல் தாங்களீட்டிய பாவங்களனைத்தும் பஸ்மீகரமாய்ப் போய்விடும் என்றெண்ணிப் புண்ணியச் செயல்களோடு பாவங்களையும் அஞ்சாது, செய்கின்றார்கள். இவர்கள் "பசுவைக்கொன்று தின்றுவிட்டு, அதன்தோலால்செருப்புக்கட்டித் தானஞ் செய்தவன் போல்" பிறரை வஞ்சித்தும், கடுவட்டி வாங்கியும், கலக்கணக்காய்ப் பொய்கூறியும் பெரும் பொருளீட்டிப் புகழை விரும்பித் தருமஞ் செய்கின்றார்கள். செய்த புண்ணியம் பொருட்சாரணைச்சேர இவர்கள் இரண்டு வழியாலும் நரகத்தையே கண்ணுகிறார்கள்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நாம் அனைவரும் மும்மலப் பிணிப்பின் வசப்பட்டவர்களாதலினுல், தீவினைகளை முற்றும் நீக்கி நல்வினைகளையே புரிய வல்லேமலேம்; ஆனுலும் நாம் அவ்வாறு மலங்களினுற் பந்திக்கப்படுகினும் நம்முடைய கேவல நிலைமைக்கு வருந்தி, அநாதரூரீகரும், அடியார்க்கெளியரும், அறவாழியந்தணரும், ஜநனமரண ரகிதருமாகிய சிவபெருமானுடைய பாதசரோருகங்களில் நீங்காத பற்றுவைத்து அவரது குற்றேவலைச் செய்து விடப்போமாயின், பாவம் ஒன்றும் நம்மை வந்து அணுகாது; கூற்றுவனும் நாம் இருக்குந் திசையை நோக்க அஞ்சுவான்.

## கடிதம்

### பண்ணைத்துறை மோட்டோர்ரதமும் பிரயாணிகளின் கஷ்டமும்.

இத்துறைக்கு ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினுதீவு, நெடுந்தீவு ஆதியாமிடங்களிலிருந்து வருவோர் அநேக காலங்களாக பாதசாரிகளாயும், நடக்கவியலாதோர் வண்டியூர்ந்தும் சென்றனர். யாழ்ப்பாணநகரத்தில் அங்கும் இங்குமாய் மோட்டோர்ரதங்கள் ஓடுவதினுல் இத்துறைக்கும் பிரயாணிகளை யேற்றிச் செல்லும்நோக்கமாக இற்றைக்கு இரண்டு வருடங்களின்முன் யாழ்ப்பாண வாசியாகிய மேதர் மக்களில் ஒருவர் ஓர் மோட்டோர் ரதம் கொண்டுவந்து நேரகுசியமைத்துக் காலந்தவருது பிரயாணிகளை மிக வசதியாய் ஏற்றிச் சென்றனர் பிரயாணிகளும் குறிக்கப்பட்ட இடத்துக்குக்குறிக்கப்பட்டநேரத்திற் சென்று தாம் எண்ணிய கருமத்தைக் காலதாமதமின்றி முடித்து வந்தனர். இதனுல் பெருத்த வருவாய் வருவதாய்க் காரம்பனில் வசிப்போரில் ஒருவர் எண்ணி 'அண்டைவீட்டுக்காரி ஆண்மகவைப் பெற, அயல்வீட்டுக்காரி அம்மிக்குழவியா லடிவயிற்றி லடித்துக்கொண்டாற்போல,' ஆத்திரப்பட்டு இம்மோட்டார்ரதத்திற்கு எதிராகத் தாமும் ஓர் மோட்டோர்ரதம் கொண்டுவந்து பிரயாணிகளை ஒழுங்காயேற்றிச்சென்றனர். இதனுல் இருரதங்களுக்கும் வருவாயில் லாமையினுல் முன்வந்த மோட்டோர் இரதம் "பழைய குருடி கதவைத்திறவடி" என்றாற்போலதிரும்பி யாழ்ப்பாணம்போய்விட்டது. காரம்பன்வாசியால் வைக்கப்பட்ட இரதம் சிலகாலத்தின்பின் "வரவரமாமியார் கழுதைபோல" என்ற கதைபோல் குறிக்கப்பட்டநேரங்களின்றி குறிக்கப்பட்ட இடங்களுக்கு நினைத்தபடி ஓட்டப்படுகிறது. இதனுல் பிரயாணிகள் இவ்விரதத்தை நம்பிவந்து குறிக்கப்பட்ட இடத்துக்கு குறித்தவேளைக்குப் போகாது தாம் எண்ணிவந்த கருமங்களையும் முடிக்கவியலாது தத்தளிப்பாராயினர். இவ்விரதத்தினுல் வண்டிக்காரரும்தம்வண்டிகளைச்சித்தப்படுத்தாதொழிந்தனர். நான் இற்றைக்கு எட்டுமாசங்களாக இம்மோட்டோர் இரதத்தை நம்பி வராதிருந்தேனுயினும்இம்மாசம் 7-ந்திகதிஇவ்விரதத்திலேறவேண்டியவனுய் விட்டேன். அன்று நான் யாழ்ப்பாணத்திலிருந்துகாலைஎட்டுமணியளவில் தெற்குப்பண்ணைத்துறையைக்கிட்டச்சேர்ந்தேன் எனதிஷ்டயீனம் காரணமாக காம்பன்வாசியால்வைக்கப்பட்ட பழைய பத்தினிஎன்னும் மோட்டோர் இரதமும் நான் துறையில்இறங்குவதற்கு க்கால் மணித்தியாலத்துக்குமுன் துறையைக் கிட்டிச் சேர்ந்தது. நானிறங்கி அவ்விடம் கடைவைத்திருக்கும் நாகலிங்கம் என்பவரிடம் போய் வண்டிகட்டி விடும்படி கேட்க அவர் இவ்விரதத்தைக் கண்டமாத்திரத்தில் எனது காளைகளை விற்றுவிட்டேன். இதைக்கேட்ட இரதம் ஓட்டுபவராகிய முருகேசு என்பவர் ஐயா உம்மைநான் $10\frac{1}{2}$ மணி வரையில் வேலணைத் துறையில் இம்மோட்டோர் இரதத்திற் கொணடுபோய் விடுவேனென்றார். நானும் ஒன்றும் செய்ய இயலாது பழம் நழுவிப்பாலில் விழுந்தாற் போல சம்மதித்து விட்டனன். இதற்கிடையில் மோட்டோர் இரதத்துக்கும் எண்ணெயுமின்றி எண்ணெய்க்குக் காசுமின்றி முருகேசு தட்டுக்கெட்டு அக்கடைக்காரன்நாகலிங்கத்திடமே ரூபா. ஐந்து கடன் வாங்கி கடுகெனவாவென்று கணபதிப்பிள்ளையை துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினுர். சென்ற கணபதிப்பிள்ளையும் ஏதோகாலதாமதம் பண்ணி அறைக்குப் பதினொருமணி அடித்தன் பின் வந்து சேர்ந்தனர். அதன்பின் பின்னேரம் ஒரு மணிவரையில் வேலணைத் துறையைச் சேர்ந்தனன். இம்மோட்டோர் இரதம் வைத்திருப்போர் வருவாய் இல்லாது தாங்களும் கெட்டு பிரயாணிகளையும் கெடுத்து வண்டிக்காரருக்கும் நஷ்டமுண்டாக்க வேண்டுமா? நேரகுசி அமைத்து ஓட இயலாதாகுல் இரதத்தை ஓடாது விடலாமே. பிரயாணிகள் முன்போல் நடப்போர் பாதசாரிகளாயும் இயலாதோர் வண்டிமூலமாயும் பிரயாணத்தை முடித்துக் கொள்வார்களே. காரம்பன் வாசியாரே! மோட்டோர் இரதத்தை முறைப்படி நடத்துங்கள் கட்டமாயின் விட்டு விடுங்கள் பிரயாணிகளை நம்பி மோசம்போகும்படி செய்யாதீர்கள்.

இங்ஙனம்
உண்மை விளம்பி
வே சி.
புங்குடுதீவு.

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்ருவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

### சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்த வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள முறைப்படி பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, வககாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சாப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனக்குடன் அறியவேண்டியதெனறே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இனும். பினுங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமான்து சிட்டுக்குருவியின் இருதம் அதாவது வெடுகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்ருவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்ருவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ எஸ். எம். ஏ காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,

## திருத் தொண்டு.

(முற்றொடர்)

அனந்தமாய் நின்ற சிவானந்த மூர்த்திக்கே யடியேர் தொண்டுசெய்யவேண்டுமன்றி நமக் காம்பயனொன் றில்லையறிந்திடுவீர். தினைத்தனை யேனு மாசில்திருவடிக்கே யடியார்க்குச் செய் தொண்டு மிகப் பெரிதாகும். திக்கற்றவேலைமு கனோ மேனர்க்கும் பினைப்பயனொன்று கருதா தேடி யன்புடன் செய்தொண்டு பெரிய வெம் பெருமான் திருவடிக்காம் பேருலகில் வேண்டு மனைவர்க்கும் பிரியதொண்டு செய்வார் வினைத் தொடக்கெலா மொழிந்து மெஞ்ஞான நெறி யுற்று மேலாய வானந்த வீட்டின்பம் பெற்று வாழ்குவாரே.

காற்ற ராம்பித் சுமந்து கலமொன் றில்லா தாரியனரக்கூடி யென்றும் நயவார்த்தை பேசி நமக்கு மவர்க்குந் தீமைபே விளைத்து ஊற்று மலக்சேணி யானை யெங்காளு மொழியா தரு முடல்பொருளாவியெலா மொன்றுசுத்தோற்று பிசுவுருந்தி யீற்றிலினியென்செய்வே மெத்தனை தொல்லை நமக்கிருக்கின்றதெங்ஙனம். யாமறுஞ் செய்வேமென்று பனம்பொருந்தார் கூற்றனுந் தன சனைக்கறிந்து வந்திடுமெவ்வேளை சொண் டழுது சற்றமெலாங் கண்டதெனவே கூடித் திக்காக்கு முடலிதனால்.

செய்பவமெலாம்பொறுத்துச் சர்வஜீவ சோ டிகளையுந் தனதொப்பில் திருவருளாற் றேற்றி வளர்த்தே நீதிலன்பரையே யென்றமுய்ய வா ட்சொண் டறவிழுக்கு மொருதனிமெய்ப் பொ ருளை ஓங்கார மாகிநின்ற உண்மைப் பரஞ் சோ தியினை யன்றியொன் றில்லானைச் சைகுவித்தே யன்புமிக நெக்குநெக்குருகிக் கசிந்துகசிந் தடி பணிந்து காரணமசம்பூரணத்தைக் கண்டறிந்து கொண்டே மெய்யாம் வீட்டின்பம் பெற்றுலே யானந்தம் வினைப்பிறவித் துயரொழியும் பிணி மூப்புந்தீரும் மேற்பேசுதற் கொன்றறியேமே.

எல்லாமு மாகிய வெந்தை பெருமானை
யேற்றிடு மவரவர்
சொல்லான் வருபேத மல்லாலருட்
ஜோதியும் வேறதோ
கல்லா ருண்மையைக் காணார்
கண்டறிந் தோர்கிலே
தில்லா ரிவர்செய் பெருவாத
நீங்கியுய்வ ரறிவாளர்களே. கடிதன்.

## லெனின் கொள்கை.

உலகம் போற்றும் உத்தமராம் சாந்தியை யொத்த சீலரும் ருஷ்ய முடிசூடாமன்ன னெனப்படுபவரும் போல்ஷிவிக்கரின் தலைவரு மான "லெனின்" என்பார் சில தினங்களுக்கு முன் இம்மண்ணுலக வாழ்க்கையை விட்டு நீத்தன ரென்பது யாவரு மறிந்ததே. இதனை யறிந்த உலகத்தாரிற் பலர் அன்னாரை வாழ்த்த சிலர் தாழ்த்திப் பேசி, வரைவதைக் காண எவரும் மனம் வருந்தாதிரார்.

பணப்பித்துப் பிடித்துப் பேராசையந்திரத் தினால் தொழிலாளரை ஆட்டிப் பிழைத்த தோடு தங்களின் பொக்கிஷங்களையும் நிரப்பி இறுமாப்படைந்து ஆண்ட முதலாளிகளை முடிவெடுத்துத் தொழிலாள ராட்சியை இயக் குவித்த புண்ணியபுருஷரான இம்மகானின் கொள்கைகளையும் கருத்தையும் நன்கு அறிந்த எவரும் அன்னாரை இகழ ஒருப்படவேமாட் டார். இவரின் கொள்கைக்கும் நம் அஹிம்சா மூர்த்தி மகாத்மாவின் திட்டத்துக்கும் ஒரு சிறுபேதத்தைக் காணலாம். "பலாத்காரம்" என்ற ஒருஅம்சமட்டும் நம் லெனினின் கொள் கையில் தவிர்க்கப்பட்டிருக்குமாயின் இவர் நமது காந்திக்கும் ஒரு சிறிதுமேற்படியிலேயே காணப்படுவார். ஆனால் உலகத்தைச் சீர்ப்படுத் துவதற்கும், அடிமைப்படுத்துவதற்கும், வெற் றிபெறுதற்கும் நினைத்தகருமங்களையெல்லாம் நினைத்த நினைத்தபடி முடித்துக் கொள்வதற் கும் தற்போதைய உலகத்தார் நலமாகக்கண்டு பிடித்த யுத்ததளபாடங்களாகிய வாள், ஈட்டி, வெடிக்குண்டு இவைபோன்றவைகள் இருக்கு மட்டும் பலாத்காரம், ஹிம்சை முதலியன தாண்டவமாடாது போகுமா?. எத்தேசத்தவர் கள் பேரோசை ஆயுதங்களில் இன்னம் நிரம் பிய நம்பிக்கை கொண்டிருக்கின்றனரோ அத் தேசத்தைச் சார்ந்தவர்களான, அதேபழக்கவ ழக்கங்களைக்கொண்ட ருஷ்யதொழிலாளரும் அம்முறையைக் கைக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஜாரின் கொடுங் கோலரசுமாண்டபின் ருஷ் யதேசத்தின் நிர்வாகங்களை நடாத்தற்கு பெரும் பாலும் முனைந்துநின்றவர் லெனின் என்பாரே இவர் "போல்ஷவிஸ்ட்" என்ற பெரும்பாலான கட்சியின் தலைவராகிப் பன்னாட்கள் செய்த விடாமுயற்சியின் பயனாய் இறுதியில் தான் நினைத்த காரியத்தில் சித்தி பெற்றார். சித்தி பெறவே தொழிலாளராகிய ஏழை வகுப்பின ரைக்கொண்டே அவ்வரசை நடத்த முயன்றார். அதனால் அவர் உலகத்திலுள்ள நிர்ப்பாக்கிய தொழிலாளருக்கே ஓர் புத்துயிரளித்த புண்ணிய சீலராயினர். இவருடையவும் இவரின் சகாக் களினுடையவும் கொள்கையின்படி தேசத்தி லுள்ள எல்லாச் சொத்துக்களும் ஒரே சமூகப்; அதாவது அத்தேசத்திலுள்ள யாவருக்குமே சொந்தமாகும். ஏழை பணக்காரரென்ற வித் தியாசமே கூடாது. இதற்கு முரண்பட்டு நிற் பார் யாராயிருப்பினும் அவர்கள்பேரில் எவ்வித பரிகாரத்தையும் உபயோகித்து எடுத்த கரு மத்தைச்சாதித்துக்கொள்ளவேண்டியதுதான். இவர்கள் கொண்ட இவ்வொரு கொள்கை யின் பலனாய் இறந்துபட்ட ஜனங்கள் மிகுதி யேயாயினும் இக்கொள்கை இல்லாவிடில் தாங் கள் கொண்ட கருத்தை நிறைவேற்ற முடியா தென்பது இவர்களின் நோக்கம்போலும். பிருசபலங்கொண்டார்க்கு இத்வோர் பிரமாத மல்லவே. ஆகவே இவ்வொரு "ஹிம்சை" என்ற கொள்கை சேர்க்கப்பட்டிருப்பதற்காக லெனினை மிகவே பாழ்படுத்திக் கூறுவது பொ ருந்தாததாகும்.

இங்ஙனம்,
அறிந்த தறிவிப்போன்.

## இந்திய சமாசாரம்.

### பொருட்காட்சி பகிஷ்காரம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பொருட்காட்சிக் கென்று இனிச் செலவழிக்கப்படும் பணத்தை நிறுத்தவேண்டுமென்று பம்பாய் சட்டசபை யில் ஒரு சுயராஜ்யக்கட்சி அங்கத்தினர் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறிவிட்டது. எனவே, பம்பாய் சட்டசபையும் பிரிட்டிஷ் பொருட்காட்சியைப் பகிஷ்கரித்து விட்டது. இப் பொருட்காட்சியினால் இந்தியாவுக்கு விளையும் நன்மைகள் ஒன்றுமில்லை. இங்கிருக் கும் மூலப்பொருட்களை வெளிநாட்டார் அதிக மாகக் கொண்டு செல்வதற்கு இஃதொரு வழி காட்டியாக இருக்கும். —நவசக்தி.

### மயானுங் நகரம் தீக்கிரையானது

ஹென்ஜடா ஜில்லாவிலுள்ள மயானுங் பட்டினத்தில் உண்டான நெருப்பால் பட்ட ணம் முழுவதும் நாசமடைந்து விட்டது. பட் டணத்தில் ஒவ்வொரு மூலை முடுக்கும் அக்கினி மயமாயிருக்கிறது. நெருப்பணைக்கும் உதவிப் படைஞரின் முயற்சிக்குப் பயனில்லாது போயிற்று நெருப்பு எப்படி மூண்டதென்றும் நஷ்டம் எவ்வளவென்றுந் தெரியவில்லை. மயா னுங் நகரவாசிகள் தங்க இடமின்றி ஆற்றங் கரையிலும், ரஸ்தாக்களிலும், வைத்தியசாலை களிலும் தங்கி வருகிறார்கள். ஆற்றங்கரையிலி ருந்து கொள்ளைக்காரர் வருகிறார்களெனத் தெரிகிறது. இதைத்தடுப்பதற்கு ஆற்றோரத்தில் போலீஸ்பாராபோடப்பட்டிருக்கிறது. சுதேசி.

### தனியே பிரயாணஞ் செய்த பெண்ணுந்த நேர்ந்த கதி

கராச்சி கெஸர்வாஞ்சி கம்பெனியில் டைபி ஸ்டு வேலையிலிருந்த மிஸ். ரூர்க்கி என்னும் மாதரான் இரண்டாவது வகுப்பு வண்டியில் தனியே பிரயாணம் போனபோது மாத்ரா ஸ்டேஷனுக்கும் கஸீபமாவன் ஸ்டேஷனுக்கும் இடையிலே அவள்விபத்துக்குள்ளானளென்று ராவல்பிண்டியிலிருந்து சமாசாரமெட்டு கிறது. ஸ்டேஷனில் டிரெயின்வந்து நின்றதும் அவ்வண்டிக்குள் இம்மாது கழுத்துத் திருகப் பட்டுக் கிடந்ததைப் பலர் கண்டார்கள். இவள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அடுத்த சம்பார்ட் மெண்டில் மேற்சொன்ன கம்பெனியைச் சேர்ந்த ஐரோப்பியனொருவன் பிரயாணஞ் செய்துகொண்டிருந்ததாகவும் அவன்மீது அதி காரிகளுக்குச் சந்தேகம் ஜனித்து அவனைப் பிடித்து வைத்திருப்பதாகவும் தகவல் தெரிகி றது. ஐயோ பாவம்! ட்ரெயினில் தனித்துப் பிரயாணம் செய்யும் பெண்களுக்கு இதுவுமோ ரெச்சரிக்கை. ஒருநாள் அரைநாள் பிரயாண மல்ல. ரயில்வண்டிப் பிரயாணத்திலேயே இவ் வாறிருந்தால் பலநாள் தாமதிக்கவேண்டி வரும் கப்பற் பிரயாணத்தில் எவ்வாறிருக்கும்? அப்படிப்பட்ட இடர்கள் ஏதும் நேராதபடி தனிப்பிரயாணம் செய்ய வேண்டி நேரிடக் கூடிய தருணிமணிகளைத் தெய்வமே பக்கத் துணையாயிருந்து காக்குமாக! —இ. நே ன்.

### மைசூரில் நரபலி

மைசூரில் சிலமாதங்களாக யௌவன வாலி பர்கள் திடீர் திடீரென மறைந்து போவது வழக்கமாயிருந்தது. மைசூரில் மஹாராஜா காலேஜில் பீ. ஏ. படித்துக்கொண்டிருந்த வி. ராமசுவாமி ஐயங்கார் என்பவர் சென்ற வியாழக்கிழமை யன்று மாலை 4-30 மணிக்கு வழக்கம் போல லக்ஷ்மீபுரத்தில் தென் கிழக்கு மூலையில் ஓட்டப் பயிற்சி செய்து கொண்டிருந்தார். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சிறிது தூரத்திற் கப்பால் ஒரு அந்நியன் பின் புறமாக வந்து அவரது கைகளை இறுகப் பிடித்துக்கொள்ள இன்னும் சிலர் அவர்மீது பாய்ந்து கைகால்களைக் கட்டிக் கண்களை மூடி விட்டனர். இவர் சத்த முடியாதபடி வாயில் துணியடைத்து அவர்கள் இவரைச் சிறிது தூரத்திலிருந்த ஓர் இடத்திற்கு இழுத்துச் சென்றனர். சுமார் இரண்டு மணி நேரம் இவர் கள் நடந்து சென்றனர். "பாபம்! இவர் சாயங் காலம் வரையில் அன்னந் தண்ணீரில்லாமல் பட்டினியாயிருந்து தன்னுடனிருந்த ஒருவனைச் சிறிது தண்ணீர் தரும்படி தயவுடன் கேட் டார். அதன்படியே அவரது வாயைத் திறக்கச் செய்து அச்சிறுவன் சிறிது தண்ணீர் ஊற்றினான்.

இரவு 7 மணி சுமாருக்குக் கண்களும் கை கால்கட்டுகளும் அவிழ்த்து விடப்பட்டன. தன் எதிரில் கன்னங் கரேலெனப் பூதம்போன்று ஒருவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு பயந்து மெல்லிய குரலில் தன்னை யதற்காக அவ்விதம் சிறை பிடித்து வரவேண்டுமென்று கேட்க அதற்கு அப்பாவி மறுநாள் காலை ஒரு தேவதைக்குப் பலியிடப்போவதாகச் சிறிதும் இரக்கமின்றி மொழிந்தான். மறுநாள் காலை எவ்விதமேனும் தப்பித்துச் செல்லவேண்டும் என்னும் எண்ணத்துடன் தனக்குக் காவலாயி ருந்தவர்களைத் தான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுவதாகவும் அதற்காகத் தன்னைச் சிறிது உலாவவிடும்படிகேட்க அவர்களும் அவ்விதமே விடுவித்தனர். சிறிது தூரம் கடந்ததும் அவர் எதிர்பாராதவிதமாக ஓட்டம் பிடித்தார். சிலர் பின்தொடர்ந்தனர். ஆபத்துக் காலத்தில் அசாத்தியமான தைரியம் உண்டாகுமாதலின் அவர் வாயுவேக மனோவேகமாக ஓடித் தம் வீட்டையடைந்து மூர்ச்சையாகிக் கீழே விழுந் தார். மறுநாள் விபரங்கள் போலீசாருக்குத் தெரிவிக்கப்பட்டன. இது திற்ச,

சென்ற கிழமை ஒரு நாள் மாலை பள்ளிக் கூடத்தினின்றும் வீட்டிற்குத்திரும்பி வந்து கொண்டிருந்த இருவரை (ஒருவர் ஆண் மற் றொருவர் பெண்) திடீரெனச் சிலர்வழிமறித்து அழைத்துச் சென்றனர். ஆனால் அவர் தமது சாமர்த்தியத்தினால் தப்பித்துச் சென்று விஷ யத்தைப் பொலீசுக்குஅறிவிக்கச் சிலகிமிஷங்க ளுக் கெல்லாம் அப்பாதகர்கள் பிடிபட்டனர். அப்பாவிகள் தற்போது ஸெண்ட்ரல் ஜெயிலில் இருக்கிறார்களாம். இன்னும் சிலர் அப்பாவி களின் துரோகத்திற்கு இரையாயினராகத் தெரிகிறது "இந்து நேசன்"


## திறமான மங்களூர் ஓடுகள்

மெஸ்ஸேர்ஸ் மோர்க்கன் அண்கோ அல்வாரிஸ் அண்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற் றோடுகள், பீலியோடுகள், கண்ணாடி யோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தள வரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைக ளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ள லாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவா னந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னி டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பத கிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த சட்டுவிலை ரூபா 2.00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பா கம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

## "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள். (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின் றோம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந் தனவும்

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள் இவைகளே யாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச் சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றவருடகால மாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப் படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென் பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான் றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித் துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களி டம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.
தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.
(H. 25.)

## காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற் றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக் கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

## வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப் பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

## The Manager N. Mohamed Ally & Co.,

**Medical Hall, Porto-Novo, S. A. District.**

துரைகளே! கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், தளர்ந்துபோன நரம்புகளையும்
சரிப்படுத்தி ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு
பலத்தைக் கொடுக்கும் மெடல் பெற்ற

# "சிட்டுக்குருவி கிருத லேகியம்."

வெண்பா.

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறக்கிப் பண்ணுங்காண்—பூவினையிற்
கட்டுற்ற மாதர்களைக் கைகுவித்துக் கோஞ்சுவிக்கச்
சிட்டுக் குருவித் திறம்.

இந்தச் சிட்டுக்குருவி கிருதத்தின் லேகியத்தைப்போல் மற்ற
வைத்தியர்கள் செய்து கொடுத்தால் 2,000 ரூபாய் இனாம்.

நண்பிற் குசுந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மண வாழ்க்கையில் சுகானந்த இன்பத்தை யடைவார்கள். ஆஹா! குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் ரத்தக் குறைவு, பலஹீனம், அஸ்தி, வெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், நரம்பு தளர்ச்சி, ஆண்குறி சிறுத்தல், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம், பித்தாதிக்கஉஷ்ணவாய்வு, கிருமி ரோகம், தர்நீர் வியாதிகள், தேகத்தில் ஒடித்திரியும் பலவித வாய்வுரோகம், பாரிசவாய்வு, நெஞ்சுவலி, (Nervous Diseases) விரைவாதம், கைகாலசதி, மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விருத்திசெய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்ததாதுக்களை வலுப்படுத்தி, வீரியத் தைக் கெட்டிப்படுத்தி ஆண்தத்துவத்தை விர்த்திசெய்து புத்தி சாதுர்யத்தைக் கொடுத்து தத் துவமிழந்த கிழவர்களையும் பால்ய பருவ ஆண்சிங்கமாக்கிவைக்கும். ஸ்திரீசம்பன்னராய் வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்ச்செய்கையால் நடுப்பிராயத்தில் ஏற்படும் வீரியநஷ் டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. சுத்தமாய் ஆண்தன்மை அற்றுப்போன கிழவர்களையும் இந்த லேகியம் இல்லற இன்பத்தை அனுபவிக்கும்படி செய்கி றது. இந்த மெடல் பெற்ற சிட்டுக்குருவி கிருத லேகியம் சாப்பிட்டு குணமில்லையென்று சத் தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1,000 இனாம் கொடுக்கப் படும். ஓர் தடவை பரிட்சை செய்யவும்.

40-நாளைக்குச் சாப்பிடும் 16-பல டப்பி விலை ரூபா 10—0—0.
20-நாளைக்குச் சாப்பிடும் 8-பல டப்பி விலை ரூபா 5—0—0.

☞ பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரு முதலிய பிற தேச வாசி கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ் ரூபா 2-0-0வும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெற வேண்டும். வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலா சம் தெளிவா யெழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—மானேஜர், ☞ எமது சிலோன் ஏஜண்டுகள்,

என். முகம்மது அலி அண்டுகம்பெனி S. M. M. அப்துல்காதர் & கோ.,
மெடிக்கல் ஹால், பேன்சி குட்ஸ்மேட்சந்து, 5சந்திரோட்டு,
பரங்கிப்பேட்டை, தென்னார்காடு, ஜில்லா. வண்ணார்பண்ணைபோஸ்டு, யாழ்ப்பாணம்.

(M. 31.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.